# DEPOSITION OF WITNESS

# IN THE COURT OF ADDITIONAL DISTRICT MUNSIF, TENKASI.

O.S.No.321/2021

Deposition of witness for PW1

| | | |
|---|---|---|
| Name | : | கணேசன் |
| Father's Name | : | பொன்னுச்சாமி நாடார் |
| Village | : | |
| Taluk | : | |
| Religion | : | |
| Age | : | 63 |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 09.07.2025.

<u>முதல் விசாரணை</u>:

நான் இந்த வழக்கில் 2 ம் வாதி. என்னுடைய முதல் விசாரணைக்காக நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். இந்த நிரூபண வாக்குமூலம் என்னுடைய தகவலின் அடிப்படையிலேயே தயார் செய்யப்பட்டுள்ளது. நிரூபண வாக்குமூலத்தை படித்துப்பார்த்து உண்மை என உறுதி கூறி கையொப்பம் செய்துள்ளேன். 20.01.1932 ல் நாடார்கண்ணு நாடார்(1),சிதம்பர நாடார்(2), பொன்னுச்சாமிநாடார்(3) ஆகியோர்களுக்கு குத்தாலிங்க நாடார் மற்றும் சுந்தர வடிவம்மாள் எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் சார்பதிவாளர் நகல் வா.சா.ஆ.1, 13.09.2009 ல் 1 ம் வாதிக்கு நான் எழுதிக்கொடுத்த ஏற்பாடு ஆவணம் சார்பதிவாளர் நகல் வா.சா.ஆ.2, 09.09.2010 ல் எனக்கு, சங்குகிருஷ்ண நாடார் எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் சார்பதிவாளர் நகல் வா.சா.ஆ.3, 12.12.1995 ல் தங்கசாமி நாடார் அவர்களுக்கு கைக்கொண்ட நாடார்

வகையறா எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் சார்பதிவாளர் நகல் வா.சா.ஆ.4, 10.11.2009 அனித்தசரத் பைஜு அவர்களுக்கு தங்கசாமி நாடார் வகையறா எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் சார்பதிவாளர் நகல் வா.சா.ஆ.5, 01.07.2009 ல் எனக்கு 3,4 பிரதிவாதிகளின் தகப்பனார் தங்கசாாமி நாடார் எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் சார்பதிவாளர் நகல் வா.சா.ஆ.6, 04.04.2002 ல் மகேஷ்வரி என்பவருக்கு தங்கசாமி நாடார், குத்தாலிங்கம் எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் சார்பதிவாளர் நகல் வா.சா.ஆ.7, 20.06.2012 ல் செல்வராஜ் என்பவருக்கு தர்மராஜ் என்பவர் எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் சார்பதிவாளர் நகல் வா.சா.ஆ.8, பட்டா மாற்றம் சம்பந்தமாக வாதிகள் மனு செய்தற்குரிய ரசீது இணைய வழியில் பதிவிறக்கம் செய்யப்பட்டது வா.சா.ஆ.9, 26.02.2021–ல் வாதிகள் பிரதிவாதிகளுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக கைநகல் வா.சா.ஆ.10, 01.03.2021 வாதியின் அறிவிப்பை பிரதிவாதிகள் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டை (எண்ணம்–4) அசல் வா.சா.ஆ.11, 21.04.2021 தேதியில் 3,4 பிரதிவாதிகள் அனுப்பிய பதில் அறிவிப்பு அசல் வா.சா.ஆ.12, 30.06.2021 தேதியில் தென்காசி மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்தில் இருந்து, வாதி வழக்கறிஞருக்கு அனுப்பிய தபால் அசல் வா.சா.ஆ.13 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை மற்றொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

ஒம்/–K.N.குரு
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி.